**25 பாலங்களின் மீள்நிர்மாணச் செயற்திட்டம் - 2020**

25 பாலங்களின் மீள்நிர்மாணச் செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அராபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியத்திற்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2014 சனவரி 30 ஆந் திகதிய 886 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 1 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நெடுஞ்சாலைகள் துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சாகவிருந்த தற்போதய போக்குவரத்து மற்றும் நெடுங்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராக உள்ளது. பயணிகள் மற்றும் பொருட்களின் போக்குவரத்திற்கான கேள்வி அதிகரிப்பினை எதிர்கொள்ளல் மற்றும் வாகன செயற்பாடுகள் மற்றும் வீதி பராமரிப்பு கிரயம், பிரயாண நேரம் மற்றும் விபத்துக்களை குறைத்தல் என்பவற்றினூடாக உரிய பகுதிகளின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்தல் என்பவற்றிற்காக மேல், சப்ரகமுவ, கிழக்கு, தென், வடமேல், மத்திய மற்றும் வட மாகாணங்களில் பாதசாரி கடவையுடன் கூடிய இரு வழிப்பாதை கொண்ட 25 பாலங்களை மீள்நிர்மாணித்தல் செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். செயற்திட்ட நடவடிக்கைகள் பொதி 01, 02 மற்றும் 03 ஆகிய மூன்று கூறுகளின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்றது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 4,632 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 35.41 மில்லியனானதுடன் இதனை அராபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2015 செப்தெம்பர் 07 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2017 செப்தெம்பர் 05 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும், செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் பூர்த்திசெய்தல் திகதி ஆரம்பத்தில் 2019 திசெம்பர் 31 வரையும் பின்னர் 2023 திசெம்பர் 31 வரையும் நீடிக்கப்பட்டிருந்தது..

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்தான தாக்கங்களை தவிர்த்து, செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடு

| கணக்கீட்டு குறைபாடு | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| பணிக்கொடை செலவினமானது அதே செயற்திட்ட கண்காணிப்பு பிரிவின் கீழ் செயற்படும் ஏனைய செயற்திட்டங்களுக்கு விகிதாசாரத்தில் பகிர்ந்தளிக்கப்படாமல் இந் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. | 1.14 | தொடர்புடைய செயற்திட்டங்களின் நடைமுறைக் கணக்குகளுக்கு இடையேயான பரிமாற்றங்கள் மூலம் இது செய்யப்படுகிறது. ஆனால் மூடப்பட்ட செயற்திட்டத்தில் இருந்து ஏற்கனவே உள்ள செயற்திட்டத்திற்கு பணம் மாற்றப்பட்டிருக்கவில்லை. | அந்த செயற்திட்டங்களிலிருந்து செலவினம் மீள்நிரப்பு செய்யப்படுதல். |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 19 – தொழில்வாய்ப்பு நலன்கள். | செயற்திட்டத்தால் அதன் ஊழியர்களுக்கான பணிக்கொடையை கணிப்பிடுவதற்கு பயன்படுத்தப்படும் முறை மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டது. 2021 ஆம் நிதியாண்டு முதல் பணிக்கொடை ஏற்பாட்டை கணிப்பிடுவதற்கு எளிமைப்படுத்தப்பட்ட முறை பயன்படுத்தப்படும். மேலும் எதிர்கால நிதிக்கூற்றுக்களில் பணிக்கொடை கணிப்பீட்டிற்காக எற்றுக்கொள்ளப்பட்ட முறை வெளிப்படுத்தப்படும். | தொடர்புடைய கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். |
| (ஆ) | 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கையின் 9.3 ஆம் உட்பிரிவு | மீளாய்வாண்டில் ஒரே ஒரு செயற்திட்ட வழிகாட்டல் குழு கூட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டது. | இணங்கப்பட்டது. முக்கியமாக கொவிட் - 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக, வழிகாட்டல் குழு கூட்டங்களை திட்டமிட்டவாறு நடாத்த முடியவில்லை. எனினும், 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வழிகாட்டல் குழு கூட்டத்தை 2022 இல் நாடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | ஆகக் குறைந்தது இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை செயற்திட்ட வழிநடாத்தல் குழு கூட்டப்படுதல் உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்றிட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம்

அராபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியத்தால் (KFAED) நிதியளிக்கப்படுகின்ற இந்த செயற்றிட்டமானது முக்கியமாக 03 பொதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. பொதி 01 இல் சேர்க்கப்பட்டுள்ள 08 பாலங்கள் ரூபா 1,168.35 மில்லியன் கிரயத்தில் கணிசமானளவு பூர்த்தி செய்யப்பட்டு 2020 யூன் 19 இல் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எனினும், பொதி 02 இல் உள்ளடங்கிய 09 பாலங்களின் பௌதீக முன்னேற்றம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 44.98 சதவீதமாக இருந்ததுடன் மேற்கூறிய இரண்டு பொதிகளும் 2022 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் பொதி 03 இல் உள்ளடக்கப்பட்ட மீதமுள்ள 08 பாலங்களின் பௌதீக முன்னேற்றம் அத் திகதியில் உள்ளவாறு 15.83 சதவீதமாகவே இருந்தது. மேலும், மீளாய்வாண்டிற்கான வெளிநாட்டு கடன் ஒதுக்கீட்டில் 25 சதவீதத்திற்கு சமமான ரூபா 403.64 மில்லியன் தொகையானது 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.2 செயற்திட்ட நோக்கங்களிற்கு அப்பால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| பிரதான பாலங்கள் நிர்மாணச் செயற்திட்டத்துடன் (JICA) தொடர்புடைய ரூபா 10.014 மில்லியன் தொகையான இழப்பீட்டு கொடுப்பனவு வரிசை அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 25 பாலங்களின் மீள்நிர்மாண செயற்திட்டத்தின் நிதிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சின் பிரதம நிதி உத்தியோகத்தரின் வாய்மொழிமூல இணக்கப்பாட்டுடன் பிரதான பாலங்கள் நிர்மாணச் செயற்திட்டத்தின் கீழ் இழப்பீட்டை செலுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டன. | பிரதான பாலங்கள் நிர்மாண செயற்திட்டத்தின் இழப்பீட்டு கிரயம் அறவிடப்பட வேண்டும். |